www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi10T

**தென்காசி மாவட்டம்**

**அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023**

13-12-2023

**வகுப்பு 10**

**தமிழ்**

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

குறிப்பு: i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது

ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

**பகுதி - I (மதிப்பெண்கள்: 15)**

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக.** **15×1=15**

1) வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை .........

அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

2) 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே

அ) பாடிய : கேட்டவர் ஆ) பாடல் : பாடிய

இ) கேட்டவர் : பாடிய ஈ) பாடல் : கேட்டவர்

3) 'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

4) கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் இல்லாதவர்கள் இல்லாததால்

ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்

ஈ) அங்கு வறுமை இல்லாததால்

5) மலர்கள் தரையில் நழுவும், எப்போது?

அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்

இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

6) 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது .........

அ) காலம்மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை

இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

7) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்

அ) உதியன், சேரலாதன் ஆ) அதியன், பெருஞ்சாத்தன்

இ) பேகன், கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன், திருமுடிக்காரி

8) திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், புதுச்சேரி, திருநெல்வேலி - இவ்வூர்ப் பெயர்களின் சரியான 'மரூஉ' வரிசையைத் தேர்க

அ) திருச்சி, புதுவை, நெல்லை, உதகை ஆ) திருச்சி, கோவை, புதுவை, நெல்லை

இ) நெல்லை, உதகை, திருச்சி, கோவை ஈ) உதகை, திருச்சி, புதுவை, கோவை

9) இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ........

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

10) சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்

ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்

இ) அறிவியல் முன்னேற்றம்

ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

11) பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ........., ........ வேண்டினார்.

அ) கருணையன் எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத் தமக்காக

இ) கருணையன் தனக்காக ஈ) எலிசபெத் பூமிக்காக

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாட
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாட'

12) பாடலின் இலக்கிய வகை

அ) பத்துப்பாட்டு ஆ) சிற்றிலக்கியம்

இ) எட்டுத்தொகை ஈ) பதினெண்கீழ்க்கணக்கு

13) 'கிண்கிணி' என்னும் அணிகலன்

அ) இடையில் அணிவது ஆ) தலையில் அணிவது

இ) காலில் அணிவது ஈ) நெற்றியில் அணிவது

14) குண்டலமும் குழைக்காதும் - இலக்கணக் குறிப்பு தருக.

அ) எண்ணும்மை ஆ) உம்மைத் தொகை

இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை

15) சீர் எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.

அ) பட்ட, பொட்டொடு ஆ) செம்பொன், பைம்பொன்

இ) கலந்தாட, சரிந்தாட ஈ) வடமாட, பதிந்தாட

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **4×2=8**

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16) **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

அ) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு இரா.இயங்குமரனார்.

ஆ) நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல்மீன் கறியும் பிறவும் கொடுத்தனர்.

17) பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

18) வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

19) செய்குதம்பி பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

20) 'காய்மணி' யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்' - உவமை உணர்த்தும் கருத்து யாது?

21) 'குன்றேறி' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **5×2=10**

22) அ) ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன் அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது - இத்தொடரைத் தனிச்சொற்றொடர்களாக மாற்றுக.

ஆ) அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார்.
- தனிச்சொற்றொடர்களைக் கலவைத் தொடர்களாக மாற்றுக.

23) 'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர் மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்' இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.

24) **மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.**

அ) கண்ணும் கருத்தும் ஆ) கயிறு திரித்தல்

25) **கலைச்சொற்கள் தருக.** அ) Regional Literature ஆ) Humanism

26) குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக.

27) ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி
- இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும் தமிழெண்களையும் குறிப்பிடுக.

28) 'மலைந்து' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **2×3=6**

29) இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பன குறித்து சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

30) தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

31) **உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழர் போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்கு தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

அ) போர் அறம் என்பது எவற்றைக் குறிக்கிறது?

ஆ) ஆவூர் மூலங்கிழார் போர் அறம் குறித்துக் குறிப்பிடுவது யாது?

இ) போரில் யாருக்கொல்லாம் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க. 34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **2×3=6**

32) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33) 'சித்தாளின் மனச் சுமைகள் செங்கற்கள் அறியாது' - இடம் சுட்டிப் பொருள் தருக.

34) **அடிபிறழாமல் எழுதுக.**

'சிறுதாம்பு' எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடல்

**(அல்லது)**

'நவமணி வடக்க யில்போல்' எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **2×3=6**

35) அவந்தி நாட்டு மன்னன் மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கின்றான். அப்போர் நிகழ்வைப்புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

36) நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.

37) அலகிட்டு வாய்பாடு தருக.

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு

## பகுதி - IV (மதிப்பெண்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5×5=25**

38) அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39) அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்ததைக் குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் முறையீட்டுக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) அலைபேசியின் நன்மை தீமைகளை விளக்கி வெளியூரில் உள்ள நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41) வீட்டு எண். 54-1, குறிஞ்சி நகர், தென்காசி மாவட்டத்தில் வசித்து வரும் வெற்றிமாறனின் மகன் பாவேந்தனுக்காக, கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42) அ) தொலைக்காட்சி, காணொலி விளையாட்டு, சமூக ஊடகங்களில் மிதப்பவர்களை நெறிபடுத்த நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியலிடுக.

1. புத்தகம் படிக்கச் செய்யலாம்
2.
3.
4.
5.

திருக்கோர், மு/
பதிராம் தெட்சிக் கோ.டிப
வல்லம் - 627809,
தென்காசிமாவட்டம்.

(அல்லது)

மொழிபெயர்க்க

**Malar** : Devi, Switch off the lights when you leave the room.

**Devi** : Yeah, We have to save electricity.

**Malar** : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.

**Devi** : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!

**Malar** : I have read som other countries are going to launch these types of illumination satellites near future

**Devi** : Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power!

## பகுதி - V (மதிப்பெண்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க.** **3×8=24**

43) அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) ஜெயகாந்தனின் தர்க்கத்திற்கு அப்பால் கதையின் வழி மனிதநேயம் வெளிப்படுவதை விவரிக்க.

44) அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

(அல்லது)

ஆ) கு.அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45) அ) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.**

முன்னுரை - சாலைப்பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு - சாலைவிதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்போம் - விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.

(அல்லது)

ஆ) முன்னுரை - உழவுத் தொழில் - உழவர் - உழவுத் தொழிலின் இன்றியமையாமை - உழவர்களை மதித்தல் - உணவை வீணாக்காமல் உண்ணுதல் - முடிவுரை.

- - - - - - - -

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com